# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)

மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## கவிதைப் படைப்பாக்கத் திறன் - பன்னாட்டுப் பயிலரங்கமும் திரு அழகர்சாமி சக்திவேல் அவர்களின் "குரலை உயர்த்தும் கோவேறு கழுதை" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா பற்றிய அறிக்கை

15.09.2025 அன்று முற்பகல் காலை 10 மணி அளவில் திண்டுக்கல் பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறையும், சிங்கப்பூர் அழகர்சாமி சக்திவேல் அறக்கட்டளையும், திண்டுக்கல் வெற்றிமொழி வெளியீட்டகமும் இணைந்து நடத்திய கவிதைப் படைப்பாக்கத் திறன் - பன்னாட்டுப் பயிலரங்கமும் திரு அழகர்சாமி சக்திவேல் அவர்களின் "குரலை உயர்த்தும் கோவேறு கழுதை" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவும் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.

கல்லூரி செயலர், அருட்சகோதரி முனைவர் நேச சௌந்தரம், கல்லூரி நிர்வாகி, அருட்சகோதரி பர்த்தலமேயு ஆகியோர் இவ்விழாவிற்கு முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர், அருட்சகோதரி முனைவர் சிறுமலர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

சிங்கப்பூர் அழகர்சாமி சக்திவேல் அறக்கட்டளை நிறுவனர், திருமிகு. அழகர்சாமி சக்திவேல் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். கவிதை எழுதும் திறனை ஊக்கப்படுத்தும் விதமாகவும் மூன்றாம் பாலினம் மற்றும் மாற்றுப் பாலின மக்களின் வாழ்வியல் நிலைகளை எடுத்துக்கூறி மாணவிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் சிறப்புரை ஆற்றினார்.

மேலும், இவ்விழாவில் சென்னை, கட்டியக்காரி என்ற நாடகக் குழுவின் நிறுவனர், ஸ்ரீஜித் சுந்தரம், அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி பேராசிரியர் முனைவர் மீனா சுந்தரம், ஜி.டி.என் கலைக்கல்லூரி வணிகவியல் பேராசிரியர் முனைவர் முருகானந்தம், வட்டாசியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற எம்.தாஜிதீன், வெற்றிமொழி வெளியீட்டு நிறுவனர், தமிழ்தாசன், APJ அப்துல் கலாம் சமூக அறக்கட்டளை நிறுவனர் மருதைகலாம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

அதன் பின்னர் சிங்கப்பூர், அழகர்சாமி சக்திவேல் அவர்கள் "குரலை உயர்த்தும் கோவேறு கழுதை" என்ற கவிதைப் புத்தகத்தை வெளியிட கல்லூரி செயலர் அவர்களும் அழைத்து சிறப்பு அழைப்பாளர்களும் புத்தகத்தைப் பெற்றனர்.

மூன்றாம் பாலினம் மற்றும் மாற்றுப் பாலின மையப் பொருளில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற பொதுப்பிரிவினர், பல்வேறு கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் பல்வேறு கல்லரி மாணவ மாணவியர்களுக்கு கேடயம், பரிசுத்தொகை மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

இக்கவிதைப்போட்டியில் முதலாமாண்டு வணிக மற்றும் கணினிப் பயன்பாட்டியல் பயிலும் மாணவி கதீஜா பேகம் முதல் பரிசுத்தொகை ரூ.1000, கேடயம் மற்றும் சான்றிதழையும் பெற்றார். முதலாமாண்டு தமிழ்த்துறை மாணவி சாரா இரண்டாம் பரிசுத்தொகை ரூ.500, கேடயம் மற்றும் சான்றிதழையும் பெற்றார்.

இப்பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஜோஸ்பின் செலின் மேரி மற்றும் உதவிப்பேராசிரியர் திருமதி ஜீலிமேரியும் கவிதைப் புத்தகத்திற்கான மதிப்புரையை வழங்கினர்.

திருமிகு. அழகர்சாமி சக்திவேல் நன்றியுரை வழங்க நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கு இனிதே நிறைவு பெற்றது.

பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)
மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002.

## கவிதைப் படைப்பாக்கத் திறன் - பன்னாட்டுப் பயிலரங்கமும் திரு அழகர்சாமி சக்திவேல் அவர்களின் “குரலை உயர்த்தும் கோவேறு கழுதை” என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா பற்றிய அறிக்கை

நாள் : 15.09.2025 இடம் : கல்லூரி கலையரங்கம்


















**திண்டுக்கல், பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**செங்காந்தாள் இலக்கிய மன்றம், தமிழ்த்துறை**

மற்றும்

**அழகர்சாமி சக்திவேல் அறக்கட்டளை, மற்றும் வெற்றி மொழி வெளியீட்டகம் நடத்தும்**

# மூன்றாம் பாலினம் மற்றும் மாற்றுப் பாலினம் கவிதைப் போட்டி

தலைப்புகள்:

**1. மாற்றுப் பாலினம் என்பது நோய் அல்ல**

**2. நான் ஆணும் இல்லை பெண்ணும் இல்லை**

**3. ஆணும் பெண்ணும் மட்டுமே பாலினம் இல்லை**

இக்கவிதை போட்டியில் ஆண், பெண், திருநங்கை என் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

முதல் பரிசு - 3000 + விருது
இரண்டாம் பரிசு - 1500 + விருது
மூன்றாம் பரிசு - 500 + விருது

சான்றிதழ் வழங்கப்படும்.

## கவிதை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 6 செப்டம்பர் 2025

பரிசு தரும் நாளும், பரிசு பெறுவோர் கவிதை வாசிக்க வேண்டிய நாளும் -
செப்டம்பர் 15, 2025 காலை 10 மணி முதல் ஒரு மணி வரை.

மூன்றாம் பாலினம் மற்றும் மாற்றுப் பாலினத்தின் நலனுக்காக நடத்தப்படும் கவிதைப் போட்டி இது

இடம்: திண்டுக்கல்
கவிதைகள் அனுப்ப வேண்டிய எண் : **65818 62071**

கவிதைகள் மேலே சொன்ன வாட்சப் எண்ணிற்கு அனுப்பினால் போதுமானது.

**A4 Size** இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்
மூவர் நடுவர்களாக இருப்பார்கள்.

இது தவிர அனைத்து கல்லூரிகளுக்கான கவிதைப் போட்டி தனியே நடத்தப்பட்டு அவர்களுக்கும்,
அதே நாளில் தனியே பரிசுகள் வழங்கப்படுகிறது

நன்றிகள்
அழகர்சாமி சக்திவேல்